# தூத்துக்குடி நகரமன்றம்
# சாதாரணக் கூட்டப்பொருள்

2007ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 31 ஆம் தேதி புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு 1920ஆம் வருடத்திய தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் அட்டவணை III விதி எண் 2(1)ன் கீழ் தூத்துக்குடி நகராட்சி அலுவலகம் இராவ்பகதூர் குரூஸ்பர்னாந்து கட்டிடத்திலுள்ள கூட்ட மண்டபத்தில் நடைபெறும் சாதாரணக் கூட்டத்தில் கீழ்க்கண்ட பொருள்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

## பொருள்கள்

1. திரு ஆர். பாலசுப்பிரமணியன் இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு ஆய்வாளராக 12–5–93 முதல் 31–5–94 வரை பணிபுரிந்துள்ளார். அன்னார் வயது முதிர்வு காரணமாக சிவகஙகை நகராட்சியில் துப்புரவு அலுவலராக பணிபுரிந்து 28–2–2007 பிற்பகல் முதல் ஓய்வுபெற்றுள்ளார். திரு ஆர். சுப்பிரமணியன், துப்புரவு ஆய்வாளர் (ஓய்வு) இந்நகராட்சியில் பணிபுரிந்த காலத்தில் ஊதியத்தில் பிடிதரம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித்தொகை சந்தா ரூ 260/–ம் அதற்கான வட்டித்தொகை ரூ 11/–ம் மொத்தம் ரூ 271/– (ரூபாய் இருநூற்று எழுபத்தொன்று மட்டும்) வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** திரு ஆர். பாலசுப்பிரமணியன் ஓய்வு பெற்றதால் அனுமதிக்கலாம்.

எச்1. 16238/07

**தீர்மானம் எண்: 577**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

2. இந்நகராட்சி தெற்கு புதுத்தெரு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் தலைமை ஆசிரியராக பணியாற்றி கடந்த 31–7–2006ல் பணியிலிருந்து ஓய்வுபெற்ற திருமதி சி. ஜுலியா என்பவர் தமது பணிக்காலத்தில் செலுத்திய சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ 2640/– மற்றும் அதற்கான வட்டித்தொகை ரூ 1572/– ஆக மொத்தம் ரூ 4212/–ஐ வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** சிறப்பு சேமநலநிதித்தொகை ரூ 4212/–ஐ வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

சி1. 20435/06

**தீர்மானம் எண்: 578**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

3. இந்நகராட்சியில் பொது சுகாதார பிரிவில் துப்புரவு பணியாளராக பணிபுரிந்து 31–7–2007ல் ஓய்வுபெற்ற சொள்ளமாடன்/கருப்பன் என்பவருக்கு அன்னார் மாத ஊதியத்தில் ரூ 20/– வீதம் 148 மாதஙகள் பிடித்தம் செய்த சிறப்பு சேமநலநிதி சந்தா

தொகை ரூ 2960/— வட்டி ரூ 2061/— மற்றும் பங்குத்தொகை ரூ 5000/— ஆக மொத்தம் ரூ 10,021/—ஐ பொது நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்

எச்2. 14669/07

**<u>தீர்மானம் எண்: 579</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**4.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளர் ஆக பணிபுரிந்து **13—3—2007**ல் காலமான துப்புரவு பணியாளர் திருமதி விட்டி/ஆறுமுகம் என்பவர் பணிக்காலத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ **2960/—** மற்றும் வட்டி ரூ **2061/—** ஐயும் சேர்த்து மொத்தம் ரூ **5021/—**ஐ அன்னாரின் வாரிசான மகன் ஆறுமுகம் என்பவருக்கு பொது நிதியிலிருந்து வழஙக மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்

எச்2. 17277/07

**<u>தீர்மானம் எண்: 580</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**5.** வார்டு எண் **5** (கந்தசாமிபுரம் மெயின்) போல்பேட்டை பகுதியிலுள்ள கதவு எண் **111/67/11** வரிவிதிப்பு எண் **50967**ல் உள்ள சீயோன் தேவசபை ஆலயத்திற்கு தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் **1920** அத்தியாயம் IV 86( c ) விதியின்படி சொத்துவரி செலுத்துவதிலிருந்து வரிவிலக்கு அளிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ஆலய வழிபாடு கட்டிடமாக உள்ளதால் வரிவிதிப்பிலிருந்து விலக்களிக்க அனுமதிக்கலாம்.

அ2. 21469/07

**<u>தீர்மானம் எண்: 581</u>**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

**6.** வார்டு எண் **9**, முத்துகிருஷ்ணாபுரம் 5ம் சந்து கதவு எண் **15, 15A, 15B** வரிவிதிப்பு எண் **90097, 90098, 90099** அரையாண்டு வரித்தொகை தலா ரூ **172/—** வீதம் **94—95** முதல் **2007—08/1** முதல் அரையாண்டு முடிய ரூ **13416/—** நிலுவையாக உள்ளது.

மேற்படி கதவு எண் கட்டிடஙகள் **1993—94**ஆம் வருடம் இடிக்கப்பட்டு அதில் திரு முனீஸ்வரன் ஆலயம் எழுப்பப்பட்டுள்ளது.

மேற்படி வரிவிதிப்பு எண்களுக்குரிய கட்டிடஙகள் இடிக்கப்பட்டு **1994—95** முதல் கோவிலாக இருப்பதாலும், தவறுதலாக பழைய கட்டிடஙகளுக்கு தொடர்ந்து வரும் நிலுவைத்தொகையை **2007—08**முதல் அரையாண்டு முடிய தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் **1920** செட்யூல் எண் **4** விதி எண் **86**(அ)வின்படி தள்ளுபடி செய்யவும், மேற்படி கட்டிடஙகளுக்கு சொத்துவரி விதிப்பிலிருந்து வரிவிலக்கு அளிக்கவும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

அ3. 19391/07

**தீர்மானம் எண்: 582**

அலுவலகக் குறிப்புபடி அனுமதிக்கப்பட்டது

7. இந்நகராட்சி வார்டு எண் 21, சண்முகபுரம் சந்தை ரோட்டில் உள்ள கதவு எண் 22C./1ல் உள்ள தூய பேதுரு ஆலய வளாகத்திற்குள் கூடுதல் பகுதியான பாரிஷ் உறால் கட்டிடம் இறை வழிபாட்டிற்கும் இறை வழிபாடு ஆலய தொடர்புடைய ஆலய காரியஙகளுக்காகவும் பயன்படுத்துவதால் சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க கோரியுள்ளார்கள். இந்நிலையில் மேற்படி பாரீஷ் உறால் பொது காரியஙகளுக்காக பயன்படுத்துவதால் தமிழ்நாடு நகராட்சிகளின் சட்டம் 1920 83( 1 ) ( a ) –ன்படி மேற்படி திருச்சபை கட்டிடத்திற்கு சொத்துவரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** ஆலய வழிபாடு பயன்பாட்டிற்காக உபயோகப் படுத்தப்பட்டு வருவதால் சொத்துவரியிலிருந்து விலக்களிக்க அனுமதிக்கலாம். அ4. 4798/07

**தீர்மானம் எண்: 583**

இப்பொருள் ரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டது

8. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் (வார்டு 1 முதல் 51 வரை) வணிகம் மற்றும் அரசுத்துறை சார்ந்த நிறுவனஙகளுக்குரிய தொழில்வரி கேட்பு கணனி மூலம் தயார் செய்து அனுப்ப கேட்பு வரி படிவம் M.F 27 ( Demand Notice for Profession Tax) 5000 (ஐயாயிரம் எண்ணம்) கூட்டுறவு அச்சகம் மூலம் அச்சிட்டு பெறவும் அதற்கு ஆகும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** மன்றம் அனுமதி வழஙகலாம்

அ15. 19486/07

**தீர்மானம் எண்: 584**

அலுவலகக் குறிப்புபடி அனுமதி வழஙகப்பட்டது

9. இந்நகராட்சிக்கு பாத்தியப்பட்ட வடக்கு காட்டன் ரோடு வணிக வளாக கடை எண் 5 மற்றும் 6 உரிமம்பெற்ற திரு மாரிமுத்து என்பவருக்கு வாடகை நிலுவை ரூ 104000/– உள்ளது. கடை எண் 7 உரிமம் பெற்ற திரு சித்ரா பிரியா என்பவருக்கு வாடகை நிலுவை ரூ 51,300/– உள்ளது. மேற்படி நிலுவையை செலுத்த இவ்வலுவலக இதே எண்ணிட்ட அறிவிப்பு மூலம் தெரிவித்தும் நிலுவை செலுத்தவில்லை. மேலும் வடக்கு காட்டன் ரோடு கடை எண் 5 மற்றும் 6ன் நடு சுவரை நகராட்சி அனுமதி பெறாமல் இடித்து ஒரே கடையாக நடத்தி வருகிறார்.

எனவே ஏல அறிக்கை நிபந்தனை எண் 12(2)ன்படி மாதா மாதம் செலுத்த வேண்டிய வாடகையை செலுத்தாததாலும் 28–ன்படி நகராட்சி சொத்தை சேதப்படுத்திதிதாலும் வடக்கு காட்டன் ரோடு கடை எண் 5, 6 மற்றும் 7–ன் உரிமத்தை ரத்துச் செய்து மறு ஏலம்

விடவும் அன்னார் செலுத்த வேண்ண்ய வாடகை நிலுவைக்கு அன்னார் செலுத்தியுள்ள ஏல முன்பணத்தில் ஈடு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

## அலுவலகக் குறிப்பு

1. கடை எண் 5, 6 க்கு குத்தகைதாரர் திரு மாரிமுத்து என்பவர் செலுத்தியுள்ள முன்பணம் ரூ 664800/–லிருந்து அக்டோபர் 2007 முடிய வாடகை ரூ 1, 04,000/–ஐ ஈடு செய்து கடையை நகராட்சி கையகப்படுத்தி மீண்டும் பொது ஏலம் விடலாம்.
2. கடை எண் 7–க்கு குத்தகைதாரர் திருமதி சித்ராபிரியா என்பவர் செலுத்தியுள்ள முன்பணம் ரூ 3,32,400/–லிருந்து அக்டோபர் 2007 முடிய வாடகை ரூ 51,300/–ஐ ஈடு செய்து கடையை நகராட்சி கையகப்படுத்தி மீண்டும் பொது ஏலம் விடலாம்.
3. வ.எண் 1 மற்றும் 2ல் கண்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

அ16. 9676/07

**தீர்மானம் எண் : 585**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

10. இந்நகராட்சி பாளையஙகோட்டை ரோடு வணிக வளாக கடை எண் 31 ஆவின் பாலகம் நிறுவனத்திற்கு வழஙகப்பட்டது. மேற்படி நிறுவன முகவரின் 4–10–2004ம் தேதிய ஒப்படைப்பு கடிதத்தை ஏற்றும் மற்றும் வருவாய் ஆய்வரின் 27–9–2007ம் தேதிய அறிக்கையில் மேற்படி கடை காலியாக இருந்ததால் பூட்டி சீல் வைக்கப்பட்டது எனவும் மேற்படி கடை உரிமத்தை ரத்துச் செய்து மறு ஏலம் விட அறிக்கை செய்யப்பட்டுள்ளது.

மேற்படி அறிக்கையை ஏற்று பாளையஙகோட்டை ரோடு கடை எண் 31–ன் உரிமத்தை ரத்துச் செய்து மறு ஏலம் விட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம். அ16. 21764/04

**தீர்மானம் எண் : 586**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

11. திரு அன்னவிஜய சரோஜா ஒப்பந்தக்காரர் பல்வேறு பணிக்கான முன் வைப்புத்தொகையை செலுத்தியுள்ளார். அன்னார் செலுத்திய வைப்புத்தொகை காலஙகடந்த வைப்புத்தொகை கணக்கிற்கு எடுத்து செல்லப்பட்டுள்ளது. எனவே அத்தொகையை வழஙக மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | Est. 19/99–2000 | = 300 |
| 2. | 34/99–2000 | = 300 |
| 3. | 1/2001–2002 | = 200 |
| 4. | 5/2001–2002 | = 300 |
| 5. | 6/2001–2002 | = 300 |
| 6. | 7/2001–2002 | = 150 |
| 7. | 14/2001–2002 | = 800 |
| 8. | 28/2001–2002 | = 200 |
| 9. | 44/2001–2002 | = 300 |

10. 48/2001–2002 = 4500
11. 50//2001–2002 = 100
12. 156/2001–2002 = 300
13. 157/2001–2002 = 450
14. இ3. 4098/2001–2002 = 400
15. இ1. 1456/2002 = 200
16. 89/2003–04 = 14710

-------

23510

------

**அலுவலகக் குறிப்பு** 1) மேற்கண்ட தொகையை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்

2) மேற்படி தொகையை வழஙக தணிக்கையில் ஆட்சேபணை இல்லை என அறிக்கை பெறப்பட்டுள்ளதால் இதனை வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

பி3. 13191/07

**<u>தீர்மானம் எண்: 587</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

12. நகராட்சிப் பணியாளர்களுக்கு வழஙகப்பட்டு வரும் சிறப்பு சேமநலநிதியின் நகராட்சிப் பஙகு தொகை ரூ 5,000/– லிருந்து ரூ 10,000/– ஆக அதிகரித்து அதனை 13–8–07 முதல் அமுல்படுத்த வெளியிடப்பட்டுள்ள நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறையினரின் அரசாணை எண் 111 நாள் 13–8–2007 மன்றத்தின் பார்வைக்கும் பதிவுக்கும் வைக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்

பி1. 21662/07

**<u>தீர்மானம் எண்: 588</u>**

அலுவலகக் குறிப்பு படி பதிவு செய்யப்பட்டது

13. இந்நகராட்சிக்குச் சொந்தமான வல்லநாடு தலைமை நீரேற்று பணியிடத்தில் புதிய திட்டத்தில் பொருத்தப்பட்டுள்ள நீரளிப்பை கணக்கிட உதவிடும் Digital Electronic Water flow meter எனும் மின்னனு சாதனம் பழுதடைந்துள்ளது. இதனால் வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து தூத்துக்குடி நகருக்கு எவ்வளவு குடிநீர் விநியோகம் செய்யப்படுகிறது என கணக்கிட இயலவில்லை. நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு தினமும் பம்பிங செய்யப்படுகின்ற விபரம் அனுப்பப்படவில்லை. மேலும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் உடனடியாக மீட்டர் பழுதுநீக்கம் செய்ய வேண்டும் என அறிவுரை வழஙகப்பட்டது. எனவே மின்னனு சாதனம் பழுதுகள் சரி செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ 50,000/–க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

இ3. 21482/07

**தீர்மானம் எண்: 589**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**14.** இந்நகராட்சிக்கு சொந்தமான கழிவுநீர் லாரி TN **69–2293** வாகனத்தின் தகுதிச் சான்று காலம் முடிவடைவதால் தேவையான பழுதுநீக்கங்கள் செய்து வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் தகுதிச் சான்று புதுப்பித்து இயக்க வேண்டும். இதற்கான செலவீனத்திற்கு மன்றம் தனது தீர்மான எண் **387** நாள் **31–7–2007**ல் அனுமதி அளித்துள்ளதன் பேரில் **8–10–2007**ல் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் இருந்து விலைப்புள்ளிகள் வரப்பெற்று உள்ளது. இவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகின்றது.

1. மெசர்ஸ் ஆர்என்ஆர் மெக்கானிக்கல் ஒர்க்ஸ், சிதம்பரநகர். தூத்துக்குடி — ரூ **32,300/–**
2. மெசர்ஸ் ஜெய் ஆட்டோ கேரேஜ் கால்டுவெல் காலனி, தூத்துக்குடி — ரூ **33,000/–**
3. மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் இன்ஜினியரிங ஒர்க்ஸ், போல்பேட்டை,தூத்துக்குடி — ரூ **31,100/–**

## அலுவலகக் குறிப்பு

வரப்பெற்றுள்ள மூன்று அரசு அங்கீகாரம் பெற்ற பணிமனைகளில் ரூ **31,100/–** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள மெசர்ஸ் அய்யனார் ஆட்டோமொபைல்ஸ் அண்ட் இன்ஜினியரிங ஒர்க்ஸ், தூத்துக்குடி நிறுவனத்தை ஏற்று அனுமதிக்கலாம்.

நகஎண் 018754/07/இ1

**தீர்மானம் எண்: 590**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**15.** இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட வாகனங்கள் பழுதடைந்து இயக்க இயலாத நிலையில் உள்ளது.

| **வாகன எண்** | **வாங்கிய வருடம்** |
|---|---|
| TN69- 2207 லாரி | **1990** பொது சுகாதாரப் பிரிவு |
| TN69- 2208 லாரி | **1990** பொது சுகாதாரப் பிரிவு |

இவ்வாகனஙகள் வாஙகி பதினேழு ஆண்டுக்கு மேல் ஆகிவிட்டபடியால் அதிக அளவில் தேய்மானம் ஏற்பட்டுள்ளது. பழுது நீக்கம் செய்து இயக்கம் செய்ய அதிக அளவில் செலவுத்தொகை ஏற்படும் என்பதாலும் அவ்வாறு செய்தாலும் சீரான இயக்கம் இருக்காது. மேலும் கூடுதல் எரிபொருள் செலவு ஏற்படும் தற்போது பொது சுகாதாரப் பிரிவுக்கு புதிய மினி டிப்பர் லாரிகள் வரப்பெற்று இருப்பதாலும் இதனை பொது ஏலம் மூலம் விடுவது அவசியமாகிறது.

மேலும் நகராட்சிகளில் உபயோகமற்ற பழுதடைந்த வாகனஙகளை பொது ஏலம் மூலம் நடவடிக்கை தொடர சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் சுற்றறிக்கையில் அறிவுறுத்தியுள்ளார்.

மேற்கண்ட காரணஙகளை கருத்தில் கொண்டு அரசு விதிமுறைகளின்படி பொது ஏலத்தில் விட்டு அதன் வருவாயை நகராட்சி நிதியில் சேர்க்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

## அலுவலகக் குறிப்பு

அரசு விதிமுறைகள்படி உரிய துறைகளின் அனுமதி பெற்று கழிவுநீக்கம் செய்யவும் ஆய்வுக் கட்டணஙகள் செலுத்தவும் பொது ஏலத்தில்விடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ1. 020572/2007

**<u>தீர்மானம் எண்: 591</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**16.** இந்நகராட்சிக்கு சொந்தமான புதிய பேரூந்து நிலையத்தில் மூன்று இடஙகளில் cable line பஙச்சர் ஆகி மின் இணைப்பு முற்றிலுமாக துண்டிக்கப்பட்டுள்ளது. இரண்டு இடஙகளில் ரோட்டை உடைத்தும் மூன்று இடஙகளில் முற்றிலுமாக 95 ச.மி.மீ. கூடுதலாக உள்ள U.G. Cable line போட வேண்டி உள்ளது. மேற்படி பணி செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 1. 00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 020579/07

**<u>தீர்மானம் எண்: 592</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**17.** இந்நகராட்சிக்கு சொந்தமான Account Section–ல் பழுதாகி போய் உள்ள வயரிஙகை மாற்றி புதியதாக வயரிங செய்ய ஆகும் உத்தேச செலவுத்தொகை ரூ 5000/– க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்.

இ3. 13413/07

**<u>தீர்மானம் எண்: 593</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**18.** இந்நகராட்சிப் பகுதி டுவிபுரம் 11வது தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணி பொது நிதியில் செய்ய 26–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜே. பொன்மணி | மதிப்பீட்டிற்கு 0. 01% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு பி. ஜோதிமணி | மதிப்பீட்டிற்கு 3. 93% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 374 தேதி 22–6–07ல் ரூ 3,60,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.01% குறைவானதுமான திருமதிஜே.பொன்மணி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 44/2007–08

**<u>தீர்மானம் எண்: 594</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

**19.** இந்நகராட்சிப் பகுதி பிரமுத்து விளை தெருவில் சிறுபாலம் கட்ட பொது நிதியில் செய்ய 26–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு 0. 52% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு 0. 14% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 225 தேதி 27–4–07ல் ரூ 1,05,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.14% குறைவானதுமான திருமதிசாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 197/2006–07

**<u>தீர்மானம் எண்: 595</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

20. இந்நகராட்சிப் பகுதி முத்துகிருஷ்ணாபுரம் 6வது தெருவில் மழைநீர் வடிகால் பொது நிதியில் செய்ய 26–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு 0. 45% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திருமதி சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு 0. 11% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 231 தேதி 27–4–07ல் ரூ 1,15,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.11% குறைவானதுமான திருமதிசாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 191/2006–07

**தீர்மானம் எண்: 596**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

21. இந்நகராட்சி அலுவலகத்திலுள்ள சுகாதார பிரிவில் கணனி அறைகள் பிரிக்கும் பணியை சுவர்ண ஜெயந்தி திட்டத்தின் கீழ் A.&.O தொகையிலிருந்து செய்வதற்கு 21–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு கே. பழனியப்பன் | மதிப்பீட்டிற்கு 0. 24% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திருஜே. சுரேஸ் ஜெயக்குமார் | மதிப்பீட்டிற்கு 0. 04% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 462 தேதி 31–7–07ல் ரூ 1,40,000/–க்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 04% குறைவானதுமான திரு ஜே. சுரேஸ் ஜெயக்குமார் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 60/2007–08

**தீர்மானம் எண்: 597**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

22. இந்நகராட்சிப் பகுதி வி.இ. சாலையில் தென்புரம் அமைந்துள்ள ஜார்ஜ்ரோடு சந்திப்பில் பகிர்மானக் குழாய் பதிக்கும் பணியை பொது நிதியில் இருந்து செய்ய 26–9–07 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு சி ரவி | மதிப்பீட்டிற்கு 1. 36% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு ஜே. விஜயன் | மதிப்பீட்டிற்கு 0. 01% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 233 தேதி 27–4–07ல் ரூ 90,000/–க்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0.01% குறைவானதுமான திரு ஜே. விஜயன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 189/2006–07

**<u>தீர்மானம் எண் : 598</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

23. இந்நகராட்சி எல்லை;கசு;டப;டட கனகசபாபதி தெரு தெப்பக்குளம் 2ம் தெருவில் சிமெண்ட் சாலை அமைக்கும் பணி பொது நிதியில் இருந்து செய்ய 19–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திருமதி எஸ். சாந்தி அருட்லா நிர்மலா தேவி | மதிப்பீட்டிற்கு 0. 02% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு பி. கண்ணன் | மதிப்பீட்டிற்கு 0. 24% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 331 தேதி 29–5–07ல் ரூ 4,70,000/–க்கு நிர்வாக அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 0. 02% குறைவானதுமான திருமதிசாந்தி அருட்லா நிர்மலா தேவி என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 10/2006–07

**<u>தீர்மானம் எண்: 599</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

24. இந்நகராட்சி எல்கைப்பகுதி லையன்ஸ் டவுண் பகுதியில் உள்ள தெருவில் பகிர்மானக் குழாய் அமைக்கும் பணிக்கு 19–9–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜி. பார்த்தீபன் | மதிப்பீட்டிற்கு 1. 59% குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு எம். தாமஸ் | மதிப்பீட்டிற்கு 2. 39% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 324 தேதி 29–5–07ல் ரூ 4,60,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு 1. 59% குறைவானதுமான திரு ஜி. பார்த்தீபன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் 13/2007–08

**<u>தீர்மானம் எண்: 600</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஒப்புக்கொள்ளப்பட்டது

25. இந்நகராட்சிப் பகுதியிலுள்ள நந்தகோபாலபுரம் தார்சாலை UIDSS நிதி திட்டத்தின் கீழ் ரூ 7,20,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலை உத்திரவு வழஙகப்பட்டு வேலை நடைபெற்று வருகிறது. மேற்கண்ட மதிப்பீட்டில் WBM முதல் தளம் விரிக்கும் பணிக்கு 220 மீட்டர் விடுபட்டுள்ளது. மேலும் ஏற்கனவே உள்ள சாலையின் அகலம் 5. 00 மீட்டர் உள்ளது. எனவே மேற்கண்ட சாலையின் கூடுதலாக உள்ள பகுதியிலிருந்து WBM மற்றும் தார்சாலை அமைக்கவும் கூடுதலான செலவினம் ரூபாய் 25000/– (ரூபாய் இருபத்தைந்தாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

கூடுதல் செலவினம் ரூ 25000/– அனுமதிக்கலாம். மேலும் திருத்திய மதிப்பீடு ரூபாய் 7,45,000 அனுமதிக்கலாம்

மபஎண் 121/2007–08

**<u>தீர்மானம் எண்: 601</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**26.** இந்நகர்பகுதி வார்டு எண் **51** ல் உள்ள ஆசிரியர் காலனி **2, 3**வது தெருக்கள் கந்தன் காலனி **1, 2** மற்றும் **3** வது தெருக்களின் மேல் பகுதியில் சீரான குடிநீர் விநியோகம் செய்ய புதியதாக பகிர்மானக் குழாய் பதிக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூபாய் **65,000/–**க்கு (ரூபாய் அறுபத்தைந்தாயிரம் மட்டும்)க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>** மன்றம் அனுமதிக்கலாம்.

மபஎண் **137/2007–08**

**<u>தீர்மானம் எண்: 602</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**27.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அண்ணாநகர் **4, 3** மற்றும் **5** தெருக்களில் மழைநீர் வடிகால் கட்டும் பணி பொது நிதியிலிருந்து செய்ய **21–9–2007** அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு **0. 04%** அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| **2.** திரு ஜே. விஜயன் | மதிப்பீட்டிற்கு **0. 02%** குறைவு | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் **228** தேதி **27–4–07**ல் ரூ **60,000/–**க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மிகக் குறைவானதும் மதிப்பீடு விகிதத்திற்கு **0. 02%** குறைவானதுமான திரு ஜே. விஜயன் என்பவரது ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் ஒப்புக்கொள்ளலாம்.

மபஎண் **194/2006–07**

**<u>தீர்மானம் எண்: 603</u>**

அலுவலகக் குறிப்பு **1, 2** ஒப்புக்கொள்ளப்பட்டது

**28.** இந்நகராட்சிக்கு சொந்தமான வார்டு எண் **1–**ல் கோமதிபாய் கிழமேல் சாலை மண்சாலையாக உள்ளது. மேற்படி சாலையில் சிமெண்ட் தளம் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ **1,70,000/–**க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மன்றம் அனுமதி வழஙகலாம்

மபஎண் **136/2007–08**

**<u>தீர்மானம் எண்: 604</u>**

அலுவலகக் குறிப்புப்படி அனுமதி வழஙகப்பட்டது

**29.** சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் நகஎண் CMA/ITC/21066 dated 5-10-2007 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் நகஎண் **5982./2007/சி2** நாள் **11–10–2007**ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி தூத்துக்குடி நகராட்சிக்கு Digital Signature Card வாஙகுவதற்கான செலவினம் ரூ **1090/–**க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** அ) அனுமதிக்கலாம்
ஆ) **12**ம் நிதிக்குழு மானிய ஒதுக்கீட்டில் கணனி உதிரி பாகஙகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் செலவழிக்கலாம்.

நகஎண் **21326/07/இ1**

**<u>தீர்மானம் எண் : 605</u>**

அலுவலகக் குறிப்பு அ, ஆ அனுமதிக்கப்பட்டது

**30.** நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருநெல்வேலி அவர்களின் கடிதம் நகஎண் **3624/07/ஆ1** நாள் **25–6–2007**ன்படி இந்நகராட்சிக்கு பகுதி–**2** திட்டம் **2007–08**ஆம் ஆண்டிற்கு ரூ **30. 00** லட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளபடி பணிகள் தெரிவு செய்யப்பட்டு அதற்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத்துறை, சென்னை அவர்கள் மூலம் M/s. ad bureau advertising (P) Limited, Chennai அவர்களால் பிஸினஸ் ஸ்டாண்டர்டு மற்றும் மதுரை மணி நாளிதழ்களில் தமிழ் மற்றும் ஆஙகிலத்தில் பிரசுரம் செய்வதற்கும் மற்றும் அதற்கான விளம்பரக் கட்டணம் ரூ **7884/–** செலுத்துவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கலாம்.

இ1. 19231/07

**<u>தீர்மானம் எண் : 606</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**31.** தூத்துக்குடி நகராட்சி வார்டு பகுதி **2** திட்டம் **2007–08** ம் ஆண்டின் கீழ் மகப்பேறு மையஙகள் மேம்பாடு செய்ய அரசாணை எண் **81** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகுதுறை நாள் **24–5–2007**ன்படி ரூ **10. 00** லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி கீழ்க்கண்ட மகப்பேறு மையம் மேம்பாடு செய்வதற்கும், அதற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வஎண் | பணியின் விபரம் | மதிப்பீடு |
|---|---|---|
| 1 | குரூஸ்புரம் மகப்பேறு மையத்தில் கூடுதல் கட்டிடம் மற்றும் பழைய கட்டிடத்தை மராமத்து செய்யும் பணி | ரூ **8. 10** லட்சம் |
| 2 | குரூஸ்புரம் மகப்பேறு மையத்திற்கு தேவையான மருத்துவ உபகரணஙகள் வாஙகுதல் | ரூ **1. 90** லட்சம் |
| | மொத்தம் | ரூ **10. 00** லட்சம் |

## அலுவலகக் குறிப்பு

1. அனுமதிக்கலாம்
2. மேற்கண்ட பணிகள் ஒப்பந்தப்புள்ளி விளம்பர செலவினத்திற்கும் அனுமதிக்கலாம்

இ1. 19231/06–1

**<u>தீர்மானம் எண் : 607</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

32. தூத்துக்குடி நகராட்சிக்கு 12வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டத்தின் கீழ் 2007–08ஆம் ஆண்டிற்கு ரூ 2403189/– ஒதுக்கீடு செய்யப்பட்டதில் முதல் கட்டமாக ரூ 1201595 சாலைகள் மற்றும் வடிகால் மேல்பாடு வேலை செய்ய நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதன்படி இரண்டாவது ஒதுக்கீடு சேர்த்து ரூ 26. 30 லட்சம் மதிப்பீட்டில் கீழ்க்கண்ட வேலைகள் செய்வதற்கும், அதற்கான மதிப்பீடுகளுக்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வஎண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | டூவிபுரம் 3வது தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 4. 95 லட்சம் |
| 2 | தெப்பக்குளம் சுற்றியுள்ள சாலைகளில் தார்சாலை, மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 4. 60 லட்சம் |
| 3 | அழகேசபுரம் 1வது மற்றும் 2வது தெரு சந்துக்களில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் கட்டும் பணி | 3. 20 லட்சம் |
| 4 | இரண்டாம் கேட் சந்திப்பு முதல் தெப்பக்குளம் சந்திப்பு வரை தார்சாலை மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 4. 60 லட்சம் |
| 5 | சுந்தரராமபுரம் பக்கிள் ஓடை குறுக்காக உள்ள வாருகால் மற்றும்சிறுபாலம் கட்டும் பணி | 4. 60 லட்சம் |
| 6 | விளம் கோவில் தெருவில் மழைநீர் வடிகால் உயர்த்தி கட்டுதல் | 0. 85 லட்சம் |
| 7 | தச்சர் தெரு அண்ணா காலனி மற்றும் வடக்கு பீச் தெரு மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்கும் பணி | 4. 00 லட்சம் |
| | மொத்தம் | 26. 80 லட்சம் |

அலுவலகக் குறிப்பு 1. அனுமதிக்கலாம்

2. ஒதுக்கீட்டை விட கூடுதல் செலவினம் நகராட்சி பொது நிதியில் ஈடு செய்யலாம். மற்றும் ஒப்பந்தப்புள்ளி விளம்பரச் செலவினம் அனுமதிக்கலாம்.

இ1. 21306/07

**<u>தீர்மானம் எண் : 608</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

33. தூத்துக்குடி நகராட்சிக்கு 12வது நிதிக்குழு பரிந்துரைத்திட்டத்தின் கீழ் 2007–08ம் ஆண்டிற்கு திடக் கழிவு மேலாண்மை திட்டப் பணிகள் செய்ய முதல் கட்டமாக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகை ரூ 24,03,189/– லட்சத்தில் இரண்டாவது கட்ட ஒதுக்கீடு தொகை மொத்தம் ரூ 48,06,378/– யில் கீழ்க்கண்ட திடக் கழிவு மேலாண்மைப் பணிகள் செய்வதற்கும் அதற்கான மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வஎண் | பணியின் விபரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) |
|---|---|---|
| 1 | உரக்கிடங்கில் உரம் தயாரிக்கும் களம் அமைத்தல் மற்றும் வடிகால் அமைக்கும் பணி | ரூ 20.00 லட்சம் |
| 2 | உரக்கிடங்கில் தரைமட்ட தொட்டி மற்றும் மேல்நிலை தொட்டி அமைத்து வசதி செய்தல் பணி | ரூ 5. 00 |
| 3 | உரக்கிடங்கில் வாட்ச்மேன் அறை மற்றும் கணனி வசதி செய்தல் | ரூ 3. 00 |
| 4 | உரக்கிடங்கில் சுற்றுச்சுவர் அமைத்தல் பணி | ரூ 6. 00 |
| 5 | உரக்கிடங்கில் மரம் வளர்த்தல் மற்றும் பசுமை ஏற்படுத்தும் பணி | ரூ 1. 50 |
| 6 | உரக்கிடங்கில் விளக்குகள் அமைத்தல் பணி | ரூ 2. 50 |
| 7 | குப்பைகள் எடுக்க தள்ளுவண்டி மற்றும் டிரை சைக்கிள் வாஙகுதல் | ரூ 4. 00 |
| 8 | உரக்கிடங்கில் குறுக்குச் சாலைகள் அமைத்தல் பணி | ரூ 7. 00 |
| | மொத்தம் | ரூ. 49. 00 |

**அலுவலகக் குறிப்பு**

1. அனுமதிக்கலாம்
2 ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையை விட கூடுதல்செலவினம் நகராட்சி பொது நிதிகள் ஈடு செய்யும் மற்றும் இத்திட்டப் பணிகள் , ஒப்பந்தப்புள்ளி விளம்பரக் கட்டணம் செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>தீர்மானம் எண் : 609</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 அனுமதிக்கப்பட்டது

34. இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 51வது வார்டில் அமைந்துள்ள 3வது மைல் பகுதியில் அமைந்துள்ள கந்தன் காலனி பகுதியில் புதியதாக போடப்பட்ட சிமெண்ட் சாலை சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து ரூ 3,50,000/– மதிப்பீடு தயார் செய்யப்பட்டு வேலை உத்திரவு வழஙகப்பட்டு வேலை நடைபெற்றது. மேற்கண்ட சாலையின் நீளம் மற்றும் அகலம் கூடுதலாக உள்ளது. எனவே மேற்கண்ட சிமெண்ட் சாலையினை முழுவதுமாக முடிக்க கூடுதலாக செலவினம் ரூபாய் 41,000/– (ரூபாய் நாற்பத்தொன்றாயிரம் மட்டும்) க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

மபஎண் 122/2007–08'

**<u>தீர்மானம் எண்: 610</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**35.** இந்நகராட்சியின் பொது சுகாதாரப் பிரிவில் துப்புரவு பணியாளர் ஆக பணிபுரிந்து **30–6–2007**ல் ஓய்வுபெற்ற துப்புரவு பணியாளர் லட்சுமி/சுப்பன் என்பவர் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ **2960/–** வட்டி ரூ **2061/–** மற்றும் பஙகுத்தொகை ரூ **5000/–**ஆக மொத்தம் ரூ **10021/–** திருமதி லட்சுமி/சுப்பன் என்பவருக்கு பொது நிதியிலிருந்து வழஙக மன்ற அனுமதி வேண்டி சமா்ப்பிக்கப்படுகிறது

**அலுவலகக் குறிப்பு** அனுமதிக்கலாம்

எச்2. 17612/07

**<u>தீர்மானம் எண்: 611</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**36.** இந்நகராட்சிப் பகுதியான **5**ஆம் வார்டு எழில்நகர் பகுதியில் ரோட்டிற்கு நடுவில் போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ள Transformer (K6/200 KVA) இடம் மாற்றியமைக்க ஆகும் மொத்த செலவினத்தொகை ரூ **97,900/–**க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதிக்கலாம்

இ3. 9116/06

**<u>தீர்மானம் எண்: 612</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**37.** இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு நகர்புற வளர்ச்சித்திட்டத்தின் கீழ் (MUDF)வாஙகப்பட்ட **3** லாரிகளுக்கான **3** வாகன ஓட்டுநர்கள், **3** துலக்குநர்கள் பணியிடஙகளும் அதே போன்று TNUDP மற்றும் MUDF திட்டத்தின் கீழ் குப்பை மற்றும் சாக்கடை நீர் அகற்ற வாஙகப்பட்ட **4** டிராக்டர்கள், **4** பவர் டில்லர்களுக்கு **8** ஓட்டுநர் பணியிடஙகளும், **4** டிராக்டர் துலக்குநர் பணியிடஙகளும் **1991–**ஆம் ஆண்டு முதல் அனுமதிக்கப்பட்டு ஒவ்வொரு ஆண்டிற்கும் பணியிட அனுமதி பெறப்பட்டு வருகிறது.

மேற்படி **18** பணியிடஙகளுக்கும் **30–9–2007**ஆம் தேதி வரை சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை எண் மூ.மு. **17359/2007**/ஜே**3** நாள் **14–8–2007** செயல்முறை ஆணையில் அனுமதி வழஙகப்பட்டுள்ளது. எனவே மேற்படி பணியிடஙகளை தோற்றுவிக்கப்பட்டு சுமார் **15** வருடஙகளுக்கு மேலாகின்ற நிலையில் அப்பணியிடஙகளை **1–10–2007** முதல் நிரந்தரமாக வைத்துக்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**குறிப்பு** அனுமதிக்கலாம்.

எச்1. 19714/2002

**<u>தீர்மானம் எண்: 613</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**38.** உதவிப் பொறியாளர் குடிசை மாற்று வாரியம், திருநெல்வேலி கோட்டம் அவர்களின் **18–9–2007**ம் தேதிய கடிதத்தில் இந்நகராட்சிப் பகுதியில் உள்ள அம்பேத்கார் காலனி, சுடலை காலனி, லோகியா நகர் குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் மேற்கொள்ளவும் மேற்படி பணிகள் முடிக்கப்பட்டவுடன் பராமரிப்பை நகராட்சியே ஏற்றுக்கொள்ளவும் அனுமதி கோரியுள்ளார். இதனை தொடர்ந்து அம்பேத்கார் காலனி, சுடலைகாலனி, லோகியா நகர் குடிசைப் பகுதிகளில் அடிப்படை வசதிகளை குடிசைமாற்று வாரியம் மூலம் மேற்கொள்ளவும் மற்றும் மேற்படி பணிகள் முடிக்கப்பட்டவுடன் பராமரிப்பை நகராட்சியே ஏற்றுக் கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் அனுமதி அளிக்கலாம்

இ1. 18032/06

**<u>தீர்மானம் எண்: 614</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதி அளிக்கப்பட்டது

**39.** தமிழ்நாடு அரசு ஊழியர்கள் மற்றும் உள்ளாட்சி நிறுவன பணியாளர்களுக்கும் பண்டிகை முன்பணம் ரூ 1000ல் இருந்து ரூபாய் 2000/– ஆக உயர்வு செய்து வரப்பெற்றுள்ள அரசு நிதி (ஊதியம்) துறையின் அரசாணை எண் 116 நாள் 3–4–2007ஐ மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு** மன்றம் பதிவு செய்யலாம்

பி4. 20673/07

**<u>தீர்மானம் எண்: 615</u>**

அலுவலகக் குறிப்பு படி பதிவு செய்யப்பட்டது

**40.** இந்நகராட்சிக்கு சொந்தமான பாளையங்கோட்டை ரோடு கழிவு நீர் நீரேற்று நிலையத்தில் ஒரு எண்ணம் 15 கு.வேக திறன் பம்ப் செட் மட்டுமே இயங்கி வருகிறது. அதற்கு Spare Motor கள் எதுவும் இல்லை. அதனை நிறுவி 25 ஆண்டுகள் ஆகிறது. தற்போது அம்மோட்டாரின் பம்பின் அடிப்பகுதி பழதாகி இருப்பதால் அம்பம்பின் அலைன்மெண்ட் மாறி உள்ளது. இனிமேல் பழுது ஏற்பட்டால் அதனை பழுது பார்த்து மிகவும் கடினமான ஒன்றாக இருக்கும். Motor vibration கூடுதல் ஆக உள்ளது,

தற்போது Spare ஆக ஒரு எண்ணம் 20 கு,வே திறன் கொண்ட Self Priming Non-clog pumpset மற்றும் spare structure பைப் சாமான்கள் சேர்த்து அமைக்க ஆகும் உத்தேச செலவுத் தொகைரூ 3,5 இலட்சத்திற்கு மன்ற அனமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/20577/07

**<u>தீர்மானம் எண்: 616</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**41.** இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் **55** மற்றம் **63**ஐ உரிமம் பெற்ற திரு கணபதிராமன் என்பவர் மேற்படி கடைக்குரிய வாடகை நிலுவை ரூ **210283/–** செலுத்த பலமுறை அறிவிப்பு வழஙகியும் செலுத்தாததால் கடை உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலம் விடவும் நிலுவைக்கு நீதிமன்றத்தில் வழக்கு தொடர நடவடிக்கை எடுக்க **4–10–07**ம் தேதிய வருவாய் ஆய்வரின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டள்ளது.

மேற்படி பரிந்துரையின் பேரில் புதிய பேருந்து நிலைய கடை எண் **55** மற்றும் **63**ன் உரிமத்தினை ரத்து செய்து மறு ஏலம் விடவும் மேற்படி கடைக்கரிய நிலுவைத் தொகை ரூல **210283/–**க்கு திரு. கணபதிராமன் என்பவர் பெயரில் நீதிமன்றத்தில் வழக்கு தொடரவும் அது வகைக்க ஆகும் செலவு தொகையை செலவு செய்ய மன்ற அனமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு – மன்றம் அனுமதிக்கலாம்

அ**16/9676/07**

**தீர்மானம் எண் : 617**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**42.** இந்நகராட்சிக்கு சொந்தமான இராஜாஜி பூஙகா நீரேற்ற நிலையத்தில் **4** எண்ணம் **40** ப.வே. திறன் மின் மோட்டார்கள் உள்ளது. அம்மோட்டார்களை குடிநீர் பணியின் அவசியம் கருதி தொடர்ச்சியாக இயக்க வேண்டிய உள்ளது. ஏதேனும் ஒரு Motor பழுதடைந்தாலும் கடிநீர் விநியோகம் செய்வது பாதிக்கப்படுகிறது. அதற்கு Spare ஆக Motor மற்றம் Starter இருந்தால் குடிநீர் விநியோகம் தடைபடாமல் தொடர்ச்சியாக செய்ய இயலும்,

எனவே ஒரு எண்ணம் **3**Phase. 4 Pole 1440 rpm **40** கு.வே. திறன் மின் மோட்டாரும் **2** எண்ணம் **40** கு.வேக ஆட்டோ டிரான்ஸ்பார்மர் ஸ்டாட்டரும் Spare ஆக வாஙக ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ **2.00** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

இ**3 20575/07**

**தீர்மானம் எண் : 618**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**43.** இந்நகராட்சிக்கு அலுவலக பயன்பாட்டிற்காக வருவாய் பிரிவுக்குத் தேவையான கீழ்க்கண்ட பொருட்களை அரசு நிறுவனமான டான்சி நிறுவனத்தில் வாஙகவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. 6 1/2 அடி ஸ்டீல் பீரோ – 4 எண்ணம்
2. 4 அடி ஸ்டீல் பீரோ – 1 எண்ணம்
3. ரோலிஙக சேர் – 1 எண்ணம்
4. 4 X 2 ஸ்டீல் டேபிள் – 3 எண்ணம்

5. S Type சேர் – 3 எண்ணம்

அலுவலகக் குறிப்பு – அனுமதிக்கலாம்

அ1/22040/2007

**தீர்மானம் எண் : 619**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

44. இந்நகராட்சி UIDSSMT திட்டத்தின் கீழ் தெற்கு ராஜாத் தெரு மற்றும் பிரஞ்ச் சேப்பல் தெரு சாலைகளில் தார்சாலை அமைக்க மதிப்பீடு ரூ.5,60,000/–க்கு தயார் செய்து பணி உத்தரவு திரு எஸ்.ரம்போலா அவர்களுக்கு வழஙகப்பட்டது. மேற்படி சாலையில் மட்டம் செய்யும் பணி நடைபெறும் போது கீழே சிமெண்ட் சாலை பழுதடைந்து மத்தியில் பள்ளமாக இருப்பது தெரிய வந்துள்ளது. மேற்படி மதிப்பீட்டில் சிவப்பு சரள் விரித்து , கல் சாலை இரண்டு அடுக்கு மற்றும் தார்சாலை அமைப்பதாக உள்ளது. ஆனால் தற்போதைய சாலை நிலைப்படி மத்திய பகுதியில் உயர்த்தியும் Bituman macadam அமைத்து அதன் பின் P.C. sort cart அமைத்து தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டில் கூடுதல் தொகை ரூ.64,500/–க்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு:**

கூடுதல் செலவினம் ரூ.64500/– அனுமதிக்கலாம். மேலும் திருத்திய மதிப்பீடு அஙகீகரிக்கலாம்.

ம.ப.எண்.

**தீர்மானம் எண் : 620**

அலுவலகக் குறிப்பு படி அஙகீகரிக்கப்பட்டது

45. இந்நகராட்சி அலுவலக தகவல் மையம் மற்றும் தட்டச்சு மையத்தை பிரிக்கும் பணி பொது நிதியிலிருந்து செய்ய 31–8–2007 அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. அவைகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. திரு ஜே.விஜயன் | மதிப்பீட்டிற்கு 20.49% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளார் |
| 2. திரு சி. ரவி | மதிப்பீட்டிற்கு 28.43% அதிகம் | டேவணித்தொகை செலுத்தியுள்ளர் |

**அலுவலகக் குறிப்பு**

1. மேற்படி பணிக்கு மன்றம் தனது தீர்மானம் எண் 1014 தேதி 14–9–07ல் ரூ 1,00,000/–க்கு அனுமதி வழஙகியுள்ளது.

2) மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தக்காரர் திரு ஜே.விஜயன் அவர்கள் மதிப்பீட்டு விலையை விட 20.49 சதவீதம் அதிகமாக விலைப்புள்ளியாக கொடுத்திருந்தார். எனவே மேற்கண்ட ஒப்பந்ததாரரிடம் Negociation பெறப்பட்டு அதன் அடிப்படையில் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் அவரிடம் மதிப்பீட்டை

விட 0.02% குறைவாக செய்ய சம்மதம் தெரிவித்துள்ளார். எனவே மதிப்பீட்டை விட குறைவாக கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

ம.ப.எண்.97/06–07

**<u>தீர்மானம் எண் : 621</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 ஏற்றுக்கொள்ளப்பட்டது

**46.** இந்நகராட்சி சிவன் கோயில் நகராட்சி திருமண மண்டபத்திற்கு 17–10–07ம் தேதி நடைபெற்ற ஏல/ஒப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

திருமதி எம். வேலம்மாள்
9, அண்ணாநகர் 3ம் தெரு, தூத்துக்குடி – ரூ.257004/– (ஒரு வருடத்திற்கு)

மேற்படி வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,57,004/–க்கு (வருடத்திற்கு) உரிமம் வழஙகுவது குறித்து மன்றத்தின் முடிவுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

சிவன் கோவில் திருமண மண்டபத்திற்கு வரப்பெற்ற ஒரே ஒப்பந்தப்புள்ளியான திருமதி எம்.வேலம்மாள் என்பவரின் தொகை ரூ.257004/–ம் (வருடத்திற்கு) முந்திய ஏலத்தொகை ரூ.450000/– விட குறைவாக இருப்பினும் மேற்படி மண்டபம் 5 முறை ஏலம் விடப்பட்டதில் தற்போது 6வது முறையாக வரப்பெற்ற தொகை ரூ.2,57,004/–ஐ விட கூடுதலாக கொடுக்க வேறு யாரும் முன் வரவில்லை. மேற்படி மண்டபத்திற்கு மீள ஏல/ஒப்பந்தப்புள்ளி கோரும் பட்சத்தில் ஏல/ஒப்பந்தப்புள்ளி அளிக்க எவரும் முன் வருவதற்கு அதிக வாய்ப்பு இல்லை. கடந்த 8 மாதமாக துறை முலம் (Departmental Collection) வசூல் செய்துள்ளது. ரூ.85000/– மட்டுமே. நகர் முழுவதும் ஏராளமான திருமண மண்டபம் சமுதாய கூடம் குறைந்த வாடகைக்கு கிடைப்பதால் பொதுமக்கள் நிகழ்ச்சி நடத்துவதற்கு பிற மண்டபஙகளை நாடி செல்லும் நிலையில் பொது ஏலத்தில் கலந்து கொண்டு போட்டி மனப்பான்மையில் ஏலம் கோருவதற்கு எவரும் ஆர்வமாக இல்லாத நிலையில் ஆறாவது முறையாக ஏலம் /ஒப்பந்தப்புள்ளி கோரியதில் திருமதி எம்.வேலம்மாள் என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.2,57,004/–க்கு (வருடத்திற்கு) உரிமம் வழஙக மன்றம் அனுமதிக்கலாம்.

அ16/22829/03

**<u>தீர்மானம் எண் : 622</u>**

மறு ஒப்பந்தப்புள்ளி கோரத் தீர்மானிக்கப்பட்டது

**47.** இந்நகராட்சி புதிய பேருந்து நிலைய கடை எண் 57க்கு 17–10–07ம் தேதி நடைபெற்ற ஏல/ஏப்பந்தப்புள்ளியில் கீழ்க்கண்ட ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1) திரு கே.அன்புராஜ்,
277, கீழச்சண்முகபுரம் வடக்கு, தூத்துக்குடி – ரூ.1150/– (மாத வாடகை)

2) ஆர்.சதீஸ் குமார்
106x/3, போல்பேட்டை மேற்கு – ரூ.1000/– (மாத வாடகை)

மேற்படி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்த திரு கே.அன்புராஜ் என்பவரின் மாத வாடகை ரூ.1150/—க்கு உரிமம் வழுங்குவது குறித்து மன்றம் முடிவு செய்யலாம்.

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

புதிய பேருந்து நிலைய கடை எண் 57க்கு திரு கே.அன்புராஜ் என்பவரின் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி மாத வாடகை ரூ.1150/— பழைய மாத வாடகை ரூ.825/—ஐ விட ரூ.325/— கூடுதலாகவும் தனியார் கடைகளின் மாத வாடகையை விட ரூ.150/— கூடுதலாக உள்ளதாலும் மேற்படி கடை நீண்ட நாட்களாக காலியாக உள்ளதால் தொடர்ந்து வருவாய் இழப்பு ஏற்படுவதை தவிர்க்கும் பொருட்டு திரு கே.அன்புராஜ் என்பவரின் மாத வாடகை ரூ.1150/—க்கு உரிமம் வழுஙக அனுமதிக்கலாம்.

அ16/22204/07

**<u>தீர்மானம் எண் : 623</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**48.** இந்நகராட்சி அலுவலகத்தில் சேவை மையம் சர்வரை 24 மணி நேரமும் இயக்கத்தில் வைத்திருப்பதால் கணினிகள் இயக்கம் மற்றும் அதன் தொடர்பான மின் பயன்பாடுகள் தஙகுதடையில்லாமல் இயஙக மின் தடை ஏற்படும் நேரஙகளில் இயக்குவதற்கு Generator தேவைப்படுகிறது. புதியதாக 62கே.வி.ஏ. Generator நிறுவி அதற்குரிய Change Over Switch, Panel Board accessories மற்றும் Cable Laying work செய்வதற்கு ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.7.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி கோரப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

12வது நிதிக்குழுவின் மான்யத் தொகையில் மின்மயமாக்கலுக்காக ஒதுக்கப்பட்டுள்ள தொகையிலிருந்து மேற்படி செலவினத்தை மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

இ3/22293/07

**<u>தீர்மானம் எண் : 624</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**49.** இந்நகராட்சியின் வரிவிதிப்பு பற்றிய விபரஙகளை பொதுமக்கள் S.M.S. மூலம் அறியும் வசதியை நடைமுறைப்படுத்த M/s. Advanced Software, Madurai நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழஙகியதின் தொடர்பாக கணனியில் S.M.S. மென்பொருள் பொருத்த ஏர்செல் நிறுவத்தின் Simcard ஒன்று நகராட்சி ஆணையர் பெயரில் ரூ.999/—க்கு நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று வாஙகிய வகைக்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று வழஙகியதை மன்றம் அனுமதிக்கலாம்.

அ1/14652/07

**<u>தீர்மானம் எண் : 625</u>**

அலுவலகக் குறிப்பு படி அனுமதிக்கப்பட்டது

**50.** இந்நகராட்சி கணினி வரிவசூல் மையத்தில் உள்ள நாற்காலிகள், Key board மற்றும் Mouse பழுதடைந்துள்ளதால் வரிவசூல் செய்வதில் மிகுந்த சிரமம் உள்ளது. மேலும் தணிக்கை பிரிவு மற்றும் பொறியியர் பிரிவிற்கு தேவையான கீழ்க்கண்ட உபகரணங்கள் 2007–08ம் ஆண்டு 12வது நிதிக்குழு பரிந்துரைத் திட்டத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள தொகையில் வாஙகுவதற்கும் அதற்கான ரூ.2.00 லட்சம் உத்தேச செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகின்றது.

**1) <u>கணினிப் பிரிவு மற்றும் கணினி மையம்</u>**

| | | | |
|---|---|---|---|
| 1) Chair (Computer) சேர் (கம்யூட்டர்) | 5+5 | - | 10 Nos. |
| 2) Key Board கீ போர்டு | 4+4 | - | 8 Nos |
| 3) Mouse மவுஸ் | 4+4 | - | 8 Nos. |
| 4) Antiglass அன்டிகிளாஸ் | | - | 10 Nos. |
| 5) Pen drive (2 GB) பென்டிரைவ் 2ஜிபி | | - | 1 No. |
| 6) Scanner ஸ்கேனர் | | - | 2 Nos. |

**<u>2) தணிக்கை பிரிவு</u>**

| | | |
|---|---|---|
| 1) Scanner ஸ்கேனர் | - | 1 No. |
| 2) CD Writer சிடி ரைட்டர் | - | 1 No. |
| 3) UPS யுபிஎஸ் | - | 1 No. |

**<u>3) பொறியாளர் அறை மற்றும் பொறியாளர் பிரிவு</u>**

| | | |
|---|---|---|
| 1) UPS யுபிஎஸ் | - | 1 No. |
| 2) Printer பிரிண்டர் | - | 1 No. |
| 3) Scanner ஸ்கேனர் | - | 1 No. |

**<u>அலுவலகக் குறிப்பு:</u>**

1) அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட இடஙகளில் கம்ப்யூட்டர் சேர், டேபிள் மட்டும் அரசு அஙகீகாரம் பெற்ற நிறுவனமான டான்சி நிறுவத்தில் நேரடியாக வாஙகுவதற்கும், மற்ற உபகரணஙகள் ஒப்பந்தப்புள்ளி கோரி வாஙகுவதற்கும் அனுமதிக்கலாம்.
3) அவரச அவசரம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி ஒப்பந்தப்புள்ளி கோர நடவடிக்கை மேற்கொள்ளலாம்.

இ1/21306/07

**<u>தீர்மானம் எண்: 626</u>**

அலுவலகக் குறிப்பு 1, 2 மற்றும் 3 அனுமதிக்கப்பட்டது

தலைவர்,
நகர்மன்றம், தூத்துக்குடி

நகர்மன்றம், தூத்துக்குடி
நாள்: 26-10-2007